

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆற்காடு ஊராட்சி ஒன்றியம். பூட்டுத்தாக்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பள்ளி கல்வித் துறையின் சார்பில் முன்னாள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து நடத்திய நூற்றாண்டு விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு உரையாற்றினார். உடன் இரத்தினகிரி தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகள். ஒன்றிய குழுத் தலைவர் திருமதி.புவனேஸ்வரி சத்தியநாதன், துணைத் தலைவர் திருமதி.ஸ்ரீமதி நந்தகுமார். மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கநிலை) சிவராமன். ஊராட்சி மன்ற தலைவர் அருண், தலைமையாசிரியர் திருமதி.விஜயலட்சுமி மற்றும் ஒன்றிய செயலாளர் ஏ.வி.நந்தகுமார், ஒன்றிய நிர்வாகிகள் தண்டபாணி, கோபால கிருஷ்ண மூர்த்தி, ஜெயபிரசாந்த் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

# திண்டுக்கல்லில் ரூ.10 லட்சத்தில் வ.உ.சி. பூங்கா!

## அமைச்சர் இ.பெரியசாமி அடிக்கல் நாட்டினார்!

திண்டுக்கல், மார்ச்.13 -

திண்டுக்கல்லில் ரூ.10 லட் சத்தில் வ.உ.சி. பூங்கா அமைப்பதற்கான பணி நடைபெற்றது. இதில் அமைச்சர் இ.பெரியசாமி கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்தார்.

திண்டுக்கல்லில் வ.உ.சி. சிலை அமைந்துள்ளது. இந்த சிலையின் அருகில் மாநகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.பத்து லட்சத்தில் வ.உ.சி. பூங்கா அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து பூங்கா அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் தலைமை வகித்தார். மாநகராட்சி மேயர் இளமதி, துணை மேயர் ராஜப்பா.மாநகராட்சி ஆணையர் செந்தில் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் இ.பெரிய சாமி கலந்து கொண்டு, பூங்கா அமைய உள்ள இடத்தில் மரக்கன்று நட்டு வைத்தார்.

பின்னர் வ.உ.சி. சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து வ.உ.சி. பூங்காவுக் கான பூமி பூஜையில் அமைச் சர் இ.பெரியசாமி பங்கேற்று அடிக்கல் நாட்டி வைத்து பேசினார். அப்போது அவர் பேசியதாவது:

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் வரலாற்றை வருங்கால சந்ததியினர், இளைஞர்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும். நமது நாடு சுதந்திரக் காற்றை சுவாசிப்பதற்காக வ.உ.சி. செய்த தியாகங்களை கணக்கிட்டு பார்க்க முடியாது. சிறையில் செக்கிழுத்தார். பல கொடுமைகளுக்கு ஆளானார். ஆனால் எதற்கும் அவர் அஞ்சவில்லை.

நாங்கள் அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்று இருக்கிறோம். நான் கூட 7 மாதங்கள் சிறையில் இருந்திருக்கிறேன். எனக்கும் சிறைவாசம் என்றால் என்ன வென்று தெரியும். அதன் சிரமங்களை சிறையில் இருந்தால் தான் நாம் அறிந்து கொள்ள முடியும். மேலும் சிறைச்சாலை நமது அறிவை வளர்க்கும் பட்டறையாக இருக்கும்.

எனவே வ.உ.சி.யின் தியாகங்களை மக்களுக்கு உணர்த்தும் வகையில் தான் அவருடைய சிலை அருகிலேயே பூங்கா அமைக்கப்பட உள்ளது. இந்த பூங்காவுக்கு வருபவர்கள் வ.உ.சி. சிலையை காண்பார்கள். அப்போது இங்கு வைக்கப்பட்டிருக்கும் அவருடைய வரலாற்றை படித்து தெரிந்து கொள்வார்கள். அது அவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டும். இவ்வாறு அவர் பேசினார். இதில், தி.மு.க. கிழக்கு,

மாவட்டச் செயலாளர் இ. செந்தில்குமார் காந்தி ராஜன் எம்.எல்.ஏ., ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ் செழியன், வெள்ளிமலை, மாநகர பொருளாளர் சரவணன், தொழில் அதிபர் ரகு ராம் , விவசாய அணி அமைப்பாளர் இல. கண்ணன், மாநகரப் பொருளாளர் மீடியோ சரவணன், கவுன்சிலர் ஜானகிராமன், முருகானந்தம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

ஒன்றிய அரசு முறையாக

# நிதி தந்திருந்தால் தமிழ்நாடு அதிக வளர்ச்சி பெற்றிருக்கும்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!


சிவகங்கை, மார்ச் 13 –

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருப்பத்தூர், சாக்கோட்டை, கல்லல் ,சிங்கம்புணரி, எஸ் . புதூர், ஆகிய ஐந்து ஒன்றியங்களுக்குட்பட்ட 208 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ் வீடு கட்டும் ஆணை வழங்கும் நிகழ்ச்சி இயக்குனர் மருத்துவர் அரவிந்த் தலைமையில் நடைபெற்றது. 208 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ் ஆணையினை வழங்கி கூட்டுறவுத் துறை அமைச்சர் கே. ஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது .

கழகத் தலைவர், முதல்வர் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் அனைத்து அரசுத்துறைகளும் வளர்ச்சி பெற வேண்டும் என்ற அடிப்படையில் அனைத்து அரசு துறையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள். இதனால் தமிழகம் கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவிலேயே சிறந்த முதல் மாநிலமாக பெற்றுள்ளது. முதல்வ ரின் நல்லாட்சியில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும் கலைஞர் கனவு இல்லம் என்ற திட்டம் மிகவும் ஒரு முக்கியமான திட்டம் ஆகும்.

1971 ஆம் ஆண்டு முதல்வராக இருந்த பொழுது தலைவர் கலைஞர் அவர்கள் குடிசை மாற்று வாரியத்தினை உருவாக்கினார். தமிழகத்தில் குடிசைகளே இல்லாத வீடுகள் கட்டப்பட வேண்டும் என்ற திட்டத்தில் வீடுகள் கட்டப்பட்டது. இதனால் தமிழகம் தன்னிறைவு பெற்றது. தலைவர் கலைஞரின் திட்டத்தினை மற்ற மாநிலங்களும் பின்பற்றினார்கள் .

இதே போல் இலவச மின்சாரத்தை கொண்டு வந்தார். தலைவர் பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் வழியில் கழக தலைவர் முதல்வர்



தளபதியின் எண்ணத்தில் உதித்தது தான் கலைஞர் கனவு இல்லம் திட்டம் ஆகும்.

பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு 60% சதவீதம் மாநில அரசு 40 சதவீதம் ஒதுக்கி கட்டப்பட்டு வருகிறது . ஆனால் அத்திட்டங்கள் பிரதம மந்திரிபெயரில் உள்ளது. இதை சிந்தித்த நமது முதல்வர் அவர்கள் தமிழகத்திலேயே நமது நிதியின் மூலம் கட்டித் தர வேண்டும் என்ற அடிப்படையில் கலைஞர் கனவு இல்லம் என்ற திட்டத்தினை உருவாக்கி கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த திட்டம் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.சிவகங்கை மாவட்டத்தில் நாம் கேட்கும் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கி அதற்கான ஆணையும் முதல்வரால் பிறப்பிக்கப்படுகின்றது .

இதனால் ஏழை, எளிய மக்கள் வீடு இல்லாதவர்கள் வீடு பெரும் வாய்ப்பினை பெற்றுள்ளார்கள். இதே போல் ஐக்கிய முற்போக்கு கூட்டண ஆட்சியில் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஆட்சியில் தேசிய மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தை கொண்டு வந்து சிறப்பான முறையில் செயல்பட்டது. 2014ல் பிரதமர் மோடி பதவி ஏற்றதும் இத் திட்டம் படிப்படியாக முடக்கப்பட்டது.

தற்போது அந்த திட்டத்தின் பெயரையே மாற்றிவிட்டார்கள் இதனால் கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய விவசாய மக்கள் வேலை இன்றி தவித்து வருகிறார்கள். கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ் தமிழக அரசு சிவகங்கை மாவட்டத்தில் இதுவரை 1500 வீடுகள் கட்டுவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது .மேலும் 532 வீடு கள் கட்டுவதற்குஅரசிடம் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது . அதுவும் விரைவில் அதற்கான உத்தரவும் வரவுள்ளது. இதுவரை 22 41 வீடுகள் ரூபாய் 71 கோடியே 47 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இந்த வீடு கட்டுவதற்காக பயனாளிகளுக்கு ரூபாய் 3 லட்சத்து 50 ஆயிரம் நிதி உதவி வழங்கி வருகிறார்கள்.

இதை வைத்து வீட்டை அழகாக நல்ல முறையில் கட்டி பயன்படுத்த வேண்டும் இந்த நிதியை கொண்டு வீடு கட்டுவதற்கு நிதி போதவில்லை என்றாலும் வங்கிகளின் மூலம் கடன் பெற்று தருவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது . இந்தியாவிலேயே தமிழகம் முதல் மாநிலமாக அனைத்து துறையில் வளர்ச்சி பெற்று திகழ்கிறது.

நாம் ஒன்றிய அரசிற்கு செலுத்தும் வரி அதிகம் உள்ளது. தமிழகம் அதிக அளவில் வளர்ச்சி திட்டங்கள் நிறைவேற்ற ஒன்றிய அரசு முறையாக நிதி கொடுத்தால் தமிழகம் பன்மடங்கு வளர்ச்சியினை பெறும் .ஆனால் இதற்கு ஒன்றிய அரசு முட்டுக்கட்டையாக திகழ்கிறது. ஒன்றிய அரசில் உள்ள பிரதமர் மோடி அவர்கள் அவர் கூறிய வாக்குறுதிகளை திட்டங்களை நிறைவேற்ற வில்லை. தமிழ்நாட்டிற்கு தொடர்ந்து ஒன்றிய அரசு வஞ்சகம் செய்து வருகின்றது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசு தரவேண்டிய நிதி இன்னும் தரப்படவில்லை. இதே போல் கல்விக்கான நிதியும் நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் இத்தகைய பிரதமர் மோடி அரசின் ஓர வஞ்சனைகளை தாண்டி தமிழகம் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை முதல்வர் செயல்படுத்தி வருகிறார் .

தமிழகத்தை தவிர இந்தியாவில் வேறு எந்த மாநில அரசும் இத்தகைய முன்னேற்றம் அடையவில்லை. குறிப்பாக கிராமப்புறத்தில் பொருளாதாரம், கல்வி வளர்ச்சி அதிகம் அடைந்துள்ளது. தமிழகம் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. இத்தகைய முன்னேற்றத்திற்கு காரணமான முதல்வர் தலைவர் தளபதி அவர்கள் ஆட்சி தொடர்வதற்கு நாம் அனைவரும் உறுதுணையாக ஒத்துழைப்பு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பேசினார். இந்த நிகழ்ச்சியில் திருப்பத்தூர் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், வாழ்த்துரை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் எஸ்.சண்முக வடிவேல், விராமதி மாணிக்கம், குன்னக்குடி சுப்பிரமணியன் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என். ரவி ஆணையர்கள் லட்சுமணராஜா, மரகதம் முனிராஜ், சத்யன், புவனேஸ்வரன், ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.முத்துக்குமார் பொருளாளர் ஏ.எம்.கண்ணன், உதயம் சண்முகம் ,உட்பட அரசு அதிகாரிகள் பயனாளிகள் கலந்து கொண்டார்கள். ஒன்றிய ஆணையர் ராஜேந்திர குமார் நன்றி கூறினார்.




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் சென்னலூர்பாடிப்பள்ளம் சாலையை நபார்டு திட்டத்தின் கீழ் 2.66 கோடி மதிப்பீட்டில் புதியதார்ச் சாலையாக மேம்படு செய்வதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார். உடன்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன், துணை சேர்மன்ஜெயபாலன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, ஊராட்சி மன்ற தலைவர் தாட்சாயணி கார்த்திகேயன்ஆகியோர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணையினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார். உடன் மாவட்ட திட்ட இயக்குநர் மரு.அரவிந்த் , திருப்பத்தூர், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன் , பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நெல்லை அரசு பொறியியல் கல்லூரியில் சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை சார்பில்

# மாநில அளவிலான சர்வதேச மகளிர் தின விழா!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு – அமைச்சர் பெ.கீதாஜீவன் தலைமையில்!

நெல்லை, மார்ச்.13 -

நெல்லை அரசு பொறியியல் கல்லூரியில் (11.03.2026) அன்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மாநில அளவிலான சர்வதேச மகளிர் தினவிழா சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு,சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் ஆகியோர் தலைமையில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், இயக்குநர் மா. சௌ. சங்கீதா, நெல்லை மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், ஆணையாளர் மரு. மோனிகா ராணா, துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.பிரசன்ன குமார், கிறிஸ்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய தலைவர் விஜலாசத்யானந்த் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

பின்னர் சட்டபேரவைத்தலைவர் மு.அப்பாவு பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பெண்களின் நலன்,பாதுகாப்பு, முன்னேற்றத்தினை ஏற்படுத்துவதற்காக பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயலாற்றி வருகிறது.புதுமைப்பெண் திட்டமானது, “ஒரு பெண்ணிற்கு கல்வி வழங்குவது ஒரு சமுதாயத்திற்கே கல்வி வழங்குவதற்கு ஈடாகும்“ என்ற கூற்றிற்கு இணங்க தமிழ்நாட்டு பெண் குழந்தைகள் அனைவரும் உயர் கல்வி பயில்வதை உயர்த்தி அதனை உறுதி செய்யும் நோக்கில் துவங்கப்பட்டு தற்போது பல்லாயிரக்கணக்கான பெண் குழந்தைகளின் உயர்கல்வி கனவை நனவாக்கி வருகிறது.

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாட்டு மாணவர்களும் தங்கள் உயர்கல்வி கனவினை நினைவாக்கிட தமிழ்ப் புதல்வன் திட்டம்,இந்த இரு மாபெரும் திட்டத்தின் கீழ் தற்போது வரை திருநெல்வேலி மாவட்டத்தில் முறையே 29,468 மாணவிகள் மற்றும் 19,518 மாணவர்கள் தங்கள் கல்லூரி கனவை நினைவாக்கியுள்ளனர். மேலும், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம், அனைத்து திருமண நிதியுதவி திட்டங்கள், அன்னை சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு விலையில்லா தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், திருநங்கைகள் நலன் சார்ந்த திட்டங்கள், பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலன், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், வரதட்சனை தடுப்பு சட்டம், பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் குற்றங்களிலிருந்து பெண்களை பாதுகாத்தல்,குழந்தை திருமண தடைச்சட்டம்,பெண் குழந்தைகளை பாதுகாப்போம் பெண் குழந்தை களுக்கு கற்பிப்போம் திட்டம், ஒருங்கிணைந்த சேவை மையம், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா சீருடை வழங்குதல், மாவட்ட மகளிர் அதிகார மையத்தின் மூலம் செயல்படுத்தப்படும் விழிப்புணர்வுகள்,முதியோர் இல்லங்கள்,மகளிர் விடுதிகள் என பல்வேறு நலத்திட்டங்களினால் பெண்களின் வாழ்வாதாரம் முன்னேற் றம் ஏற்படுகிறது.

பெண்கள் நலனில் அக்கறை கொண்டு பல்வேறு சிறப்பு திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். பெண்கள் அனைவரும் முதலமைச்சர் அவர்களுக்கு மகளிர் தினவிழா மூலம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.

முன்னதாக நிகழ்வில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் பேசியதாவது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இந்தியாவிலேயே முதல் முறையாக 1989ல் குடும்பச் சொத்தில் பெண்களுக்குச் சம உரிமை வழங்கி, தமிழ்நாடு அரசின் சார்பில் வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டம் இயற்றினார். இந்த முன்னோடிச் சட்டம்,தந்தையின் சொத்தில் மகள்களுக்கு ஆண்களைப் போலவே சம உரிமை வழங்கியது.

வேலைவாய்ப்பு மற்றும் கல்வியில் 30 சதவீதம் இட ஒதுக்கீட்டை கொண்டு வந்தார்.இந்தச் சட்டம் பல குடும்பங்களை தங்கள் பெண்பிள்ளைகளைபடிக்க வைக்கவும் வேலைக்கு அனுப்பவும் வழி வகுத்தது, 1996 உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.அதனால் உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைத்தது இன்று என்னை முதலமைச்சர் அவர்கள் அமைச்சராக்கி உள்ளார்கள்.

இன்று மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கந்துவட்டி தொல்லையின்றி வங்கிகள் மூலமாகவே அதிக அளவில் கடன்கள் வழங்கப்படுகின்றன.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பெண்கள் முன்னேற்வதற்காக சுய உதவிக்குழு மூலம் தொழில் செய்வதற்காக கடனுதவி வழங்கும் திட்டம்,விடியல் பயணத் திட்டம்,கலைஞர் மகளிர் உரிமைத்தொகை,உயர்கல்வியினை தொடர்வதற்காக புதுமைப்பெண் திட்டம்,மாவட்ட தொழில் மையத்தில் பெண்கள் தொழில்முனைவோர் திட்டத்தின் கீழ் 35 சதவீதம் மானியத்தில் தொழில் தொடங்கு வதற்காக விண்ணப்பிக்கலாம்.

மகளிர் உரிமைத் தொகை பற்றி குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் மகளிர் உரிமைத் தொகை மூலம் அவசிய தேவைக்கு குடும்பத்தில் பிறரை எதிர்பார்க் காமல் செலவழிக்க முடியும், மீதியை சேமிக்க முடிகிறது. மேலும்,2025ஆம் ஆண்டில் புதிதாக தொடங்கப்பட்ட கைம்பெண்கள் நல வாரியம் மூலமாக 1800க்கும் மேற்பட்ட பெண்கள் அவ் வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு,தற்போது 62 பெண்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி நடத்தப் பட்டுள்ளது.1930 காவல் துறையில் பெண்களுக்கு இலவச எண்,181 பெண்கள் பாதுகாப்பு மற்றும் பெண்களுக்கான இலவச எண்களில் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் குறித்து புகார் தெரிவிக்கலாம். இதன் வாயிலாக உடனடியாக உதவிகள் கிடைக்கும். உங்களது புகார்கள் குறித்த ரகசியம் பாதுகாக்கப்படும். மேலும்,பெண்கள் அனைவரும் தங்களது மொபைல் போனில் காவல் செயலினை பதிவிறக்கம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.பெண்கள் பிரச்சனைகளை கண்டு பயப்படவும், ஓடவும் கூடாது. இன்றைய பிரச்சினைக்கு நாளை தீர்வு கிடைக்கும் என்ற எண்ணத் தோடு,பெண்கள் அனைத்துத்துறை களிலும் என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டும். கிடைக்கிற வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்தி முன்னேறுமாறு கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தில் பெண்களுக்கு தன்னம்பிக்கையும் சுதந்திரமும் கிடைத்துள்ளது. எனவே துன்பத்தைக் கண்டு துவண்டு விடக்கூடாது, நம்பிக்கையோடு தொடர்ந்து போராடி வெற்றி பெற வேண்டும். அதனை சாதனை களாக்கி அனைவரும் முன்னேற வேண்டும்.பெண்களுக்கு திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு உறுதுணையாக இருக்கும்.

இவ்வாறு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் பேசினார்.

தொடர்ந்து,தேசிய பெண் குழந்தை மாநில விருது பெற்ற செல்வி. சூடாமணிக்கும்,தென்னிந்திய விளையாட்டுத்துறை மகளிர் சாதனையாளர் விருது பெற்ற கீதா க்கும்,Asian Youth Athletics இந்தியாவிற்காக விளையாடி பெருமை சேர்த்த மாணவி எட்வினா ஜேசன்க்கும் நினைவு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும், குழந்தை பாலின விகிதத்தில் உயர்த்துவதில் சிறப்பாக செயலாற்றியதற்காக மாநில அளவில் 2 ம் இடம் பிடிப்பதற்கு உறுதுணையாக இருந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட 12 துறை அலுவலர்களுக்கு நினைவு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ் களும் வழங்கப்பட்டது.

ஒருங்கிணைந்த சேவை மையத்தின் மூலம் திருநங்கையர் களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஓட்டுநர் பயிற்சி வழங்கி 17 திருநங்கையர்களுக்கு ஓட்டுநர் உரிமங்களும், தமிழ்நாட்டு பெண்கள் வாழ்வில் மறுமலர்ச்சி,குழந்தை திருமணம் தடுப்பு,பாலின சமத்துவம்,சமூக மாற்றத்திற்கான அடிப்படை, அரசியலும், பெண்களும் என்ற தலைப்புகளின் கீழ் மாவட்ட அளவில் கல்லூரியில் நடைபெற்ற பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, சுவரொட்டி உருவாக்கம் போட்டிகளில் வெற்றி பெற்ற 17 மாணவ, மாணவியர் களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும், நினைவு பரிசுகளும் வழங்கப் பட்டது.

முன்னதாக குழந்தை திருமணம் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவோம் என்ற விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை தொடங்கி வைத்தார்கள். பெண்களின் சமத்துவம் குறித்து ஆசிரியை பயிற்சி மைய முதல்வர் ஜெயமேரி,மகளிர் மருத்துவ நலன் குறித்து நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ரேவதிபாலன்,பெண்கள் மீதான குற்றங்கள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு நெல்லை மாவட்ட காவல்துறை சமூக ஊடக பிரிவு அலுவலர் வெங்கடராமன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) சுகன்யா,சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இணை இயக்குநர் நந்திதா, மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அலுவலர் தாஜூன்னிசாபேகம், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.லதா, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மு.சிவக்குமார், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அருள்செல்வி,தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) ஜெயா, அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர்.லதா, களக்காடு நகர்மன்ற துணை தலைவர் பி.சி. ராஜன், உள்பட மாணவ, மாணவியர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. மாணவர் அணி

### நிரப்பப்பட வேண்டிய மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

#### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

திருவள்ளூர் மேற்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக **பா. சதீஷ்குமார்** (5, கணேசன் தெரு, ஒண்டிகுப்பம், மணவாள நகர், திருவள்ளூர்) அவர்களும்;

விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக **டி.எம். பிரித்திவ்** (313/5, நேரு வீதி, பூந்தோட்டம், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்) அவர்களும்;

விழுப்புரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக **ரா. அரங்கநாதன்** (131, நடுத் தெரு, வீரமூர் அஞ்சல், விழுப்புரம் மாவட்டம்.) அவர்களும்;

இராமநாதபுரம் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்களாக **ஆர்.கே.கே. கார்த்திக்**, (59/4, குட்ஸ்சட் தெரு, அண்ணா நகர், இராமநாதபுரம் மாவட்டம்), **என்.டி.முகேஷ்குமார்** (12ஏ/1, மார்கெட் தெரு, இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்) ஆகியோரும் நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 11-03-2026.

இரா. ராஜீவ்காந்தி
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி